
அண்டப்புளுகன்!
"கோமாளி"



# அண்டப் புளுகன்

"கோமாளி"

**குழந்தைப் புத்தக நிலையம்**
ப.எண்: 183, பு.எண்: 5, முதல் தெரு,
AL பிளாக், 11ஆவது மெயின் ரோடு,
அண்ணாநகர், சென்னை-600 040.

**ANDAPULUGAN**

(Story for children)

| | | |
|---|---|---|
| Language | : | Tamil |
| Author | : | AL. VALLIAPPA |
| Illustration | : | Sagar, Ranu |
| First Edition | : | |
| Typeset & Printed by | : | Poocharam Prints, KKDI.<br>Ph: 9884712091 |
| No. of Pages | : | 36 |
| Price | : | Rs. **40/-** |
| Publisher | : | **Kulanthai Puthaka Nilayam**<br>Old No: 183, New No: 5,<br>First Street, AL Block,<br>11th Main Road,<br>Anna Nagar, Chennai - 600 040 |

*அருமைக் குழந்தைகளே!*

*இது ஒரு பொழுதுபோக்குக் கதை. சிரிப்பூட்டும் முறையில் சித்திரித்திருக்கிறார், இதன் ஆசிரியர்.*

*ஓர் அரசன். அவனிடத்தில் செல்வம் இருக்கிறது; அதிகாரம் இருக்கிறது! ஆனால், மூளைதான் இல்லை! மூளை இல்லாததால், அந்தச் செல்வத்தையும், அதிகாரத்தையும் அவன் எப்படி உபயோகப்படுத்துகிறான் என்பதையே இக்கதை வேடிக்கையாகக் கூறுகிறது.*

*இது பாலர் மலரில் தொடர் கதையாக வெளிவந்தது என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது நீங்கள் இதை எவ்வளவு உற்சாகத்துடன் படித்தீர்கள் என்பது நீங்கள் எழுதிய கடிதங்களிலிருந்தே தெரிய வந்தது. உங்களுடைய கட்டாயத்தால் இது புத்தகமாக வெளி வருகிறது.*

*புதுக்கோட்டை* **பதிப்பகத்தார்**
*1-7-49*


அண்டப்புளுகன்
கோமான்
கொட்டாம்புளி ராஜா
பட்டாகத்தி
விதூஷகன்
கருப்பட்டி ராஜா
வெல்லக்கட்டி மந்திரி
முக்கியமானவர்கள்...

# அண்டப்புளுகன்!

பட்டாளபுரி என்று ஒரு தேசம். அந்தத் தேசம் எங்கே இருக்கிறது என்று கேட்டு விடாதீர்கள்! அல்லது, பூகோளப் படத்தை எடுத்து, அதில் தேட ஆரம்பித்து விடாதீர்கள்! ஏனென்றால், அந்தப் பட்டணம் எங்கே இருக்கிறது என்று யாருக்குமே தெரியாது. (என்னையும் சேர்த்துத்தான் சொல்லு கிறேன்!)

முன்னொரு காலத்தில்- அதாவது உங்களுடைய கொள்ளுத் தாத்தாவுக்கு, கொள்ளுத் தாத்தாவுக்கு, கொள்ளுத் தாத்தா பிறக்கிறதுக்கு முன்னாலே, அந்தத் தேசம் காவேரி நதியின் நடு மத்தியிலே இருந்ததாம். அப்பொழுது தண்ணீர் இல்லையாம். பிறகு, தண்ணீர் பெருகி நதி ஓட ஆரம்பித்தபோது, அந்தத் தேசமும் தண்ணீரிலே கரைந்து ஓடிப்போய் விட்டதாம்! அதனால்தான், நாம் இப்போது



*அந்தப் பட்டாளபுரியைப் பார்க்க முடியவில்லையாம். இப்படிச்சில அறிவாளிகள் கூறுகிறார்கள். பிரபல ஆராய்ச்சியாளரான* **புரபஸர் கடோற்கஜராய்** *A.B.O.D., M.N.O.P., X.Y.Z. அவர்கள் கூட இதை ஆமோதித்து எழுதி இருக்கிறார்!*

*அந்தப் பட்டாளபுரியை,* **கொட்டாப்புளி மகா ராஜா** *என்று ஓர் அரசர் ஆண்டு வந்தார். அந்த மகாராஜாவின் முழுப் பெயர் என்ன தெரியுமா? மகாராஜாதி ராஜ, ராம ராஜ, படே படே மகாராஜ மன்னி சுல்தான், வில்லாதி வில்லன், மன்னாதி மன்னன், அதிதீர சூரவீர பராக்கிரம கொட்டாப்புளி மகாராஜா! (இப்பொழுது நீங்கள் படிப்பதைச் சிறிது நேரம் நிறுத்திவிட்டு மூச்சுவிடுங்கள்.)*

*இனி, அந்த மகாராஜாவுக்கு இவ்வளவு நீளப் பெயரை அடிக்கடி சொல்லி, உங்களைத் திணற வைக்க மாட்டேன். தைரியமாக மேலே படியுங்கள். பயப்படாதீர்கள்!*


*அந்த மகாராஜாதி ராஜ, ராமராஜ... இல்லை, இல்லை... அந்தக் கொட்டாப்புளி மகாராஜாவைப் பற்றி அதிகம் சொல்லத் தேவையில்லை. ஆனால், ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லாமல் இருக்க முடியாது. அப்படியே சொல்லாமல் இருந்தாலும், எனக்குத் தூக்கம் வராது. ஆகையால், அதை மட்டும் சொல்லியே விடுகிறேன். அது ஒன்றைக் கொண்டே, நீங்கள் அந்த ராஜாவைப் பற்றி எல்லாவற்றையும் தெரிந்துகொண்டு விடலாம்.*

எல்லோரையும் போலவேதான் கொட்டாப்புளி மகாராஜாவும் இருந்தார். அவருடைய தலைகூடப் பார்ப்பதற்கு நம்முடையதைப் போலத்தான் இருந்தது. அதற்குள்ளே ஓடு இருந்தது; நரம்புகள் இருந்தன; இரத்தம் ஓடியது; தசைகள் இருந்தன. ஆனால், பாவம், ஒன்றே ஒன்று மட்டும்தான் இல்லாமல் போய்விட்டது! அது என்ன என்று நானே சொல்லி விடட்டுமா?

அதன் முதல் எழுத்து, 'மூ'. கடைசி எழுத்து, 'ளை'. ஆனால், நடுவே ஓர் எழுத்துக்கூட இல்லை! இப்பொழுது உங்களுக்கு நன்றாகப் புரிந்திருக்கும். சந்தேகமேயில்லை!

அந்த ராஜாவுக்கு, ஓர் அருமையான மந்திரி. அந்த மந்திரியைப்போல் ஒரு மந்திரி கிடைப்பது மிகவும் அபூர்வம் என்று கொட்டாப்புளி மகாராஜாவே அடிக்கடி சொல்லுவது உண்டு. அவர் பெயர் என்ன என்று சொல்ல மறந்தே போய் விட்டேனே! அவர் பெயர்தான் பட்டாக்கத்தி மந்திரி.

அந்த மந்திரியின் தலையில் ராஜாவைப்போல மூளை இல்லாது போனாலும், அதற்குப் பதிலாக 'ஒன்றைப் பிரமன் வைக்காமற் போக வில்லை. அந்த ஒன்றினால் நாம் என்ன என்னவெல்லாமோ செய்யலாம். சட்டி பானை செய்யலாம்; அகல் விளக்குப்



பண்ணலாம்; பிள்ளையார்கூடப் பிடிக்கலாம்! இப்படி எல்லாவற்றுக்கும் உபயோகப்படக் கூடிய ஒரு வஸ்துவைப் பெற்ற பட்டாக் கத்தி மந்திரியார் கிடைத்தது, நமது கொட்டாப்புளி அரசரின் பாக்கியம்தான். அதற்காக அவரை நாம் பாராட்டாமல் மேலே போக முடியாது. ('கல்தா' கொடுத்துத் தள்ளினாலும் சரி தான்!)

அந்தப் பட்டாக்கத்தி மந்திரி நமது கொட்டாப் புளி மகாராஜாவுக்கு எப்படிக் கிடைத்தார் என்பதே ஒரு ரசமான விஷயம்.

'மந்திரி வேலைக்குத் தகுதி உள்ளவர்கள் மனுப் போடலாம்' என்று கொட்டாப்புளி மகாராஜா தண்டோராப் போடச் செய்தார். அரசர் உத்தரவுப் படியே நாடு, நகரம், மூலை, முடுக்கு எல்லாம் தண்டோராப் போடப்பட்டது. இதைக் கேட்ட ஜனங்கள் எல்லோருமே மந்திரியாக வேண்டுமென்று நினைத்தார்கள். ஆனால், மனுப் போட்டவர்கள் 24,739 பேர்கள்தான்!

அவர்களில் சரியாக நூறு பேர்களை மட்டும் கொட்டாப்புளி மகாராஜா நேரில் பார்வையிடுவதற்காக வரச்சொன்னார். அந்த நூறு பேர்களும் அரண்மனைக்கு வந்தார்கள். அவர்களையெல்லாம் வரிசையாக நிற்க வைத்தார், கொட்டாப்புளி மகாராஜா.

பிறகு, தமது குல குருவைக் கூப்பிட்டார். அவரிடத்தில் ஓர் அழகான மஞ்சள் பட்டுத் துணியைக் கொடுத்தார். கொடுத்து, தம்முடைய இரண்டு

கண்களையும் கட்டிவிடும்படி சொன்னார். கண்களைக் கட்டிக்கொண்டே, வரிசையாக நின்ற அந்த நூறு பேர்களில் ஒருவரை மட்டும் போய்ப் பிடித்தார். அப்படிப் பிடிப்பட்டவரையே தமது மந்திரியாக வைத்துக் கொண்டார். அந்த மதியூகி மந்திரிதான், நாம் முன்பு குறிப்பிட்ட பட்டாக்கத்தி மந்திரி.

ஒரு நாள் கொட்டாப்புளி மன்னர் தமது சபைக்கு வந்தார். உடனே, சபையில் இருந்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள். அத்துடன், அவர்கள் அரசருக்கு வாழ்த்துக் கூறிய சப்தம் காதையே செவிடாக்கிவிடும் போலிருந்தது!

**'மகாராஜாதி ராஜ ராம ராஜ கொட்டாப்புளி மகா ராஜாவுக்கு' ஜே! ஜே!**

**'படே, படே மகாராஜ மன்னி சுல்தான் கொட்டாப்புளி மகாராஜாவுக்கு' ஜே! ஜே!**

**'வில்லாதி வில்லன் மன்னாதி மன்னன் கொட் டாப்புளி மகாராஜாவுக்கு' ஜே! ஜே!**

**'அதிதீர வீரசூர பராக் கிரம கொட்டாப்புளி மகா ராஜாவுக்கு' ஜே! ஜே!**



இப்படியாக சப்தம் காதைத் துளைத்தது!

கொட்டாப்புளி மன்னர் சிம்மாசனத்தில் அமர்ந்ததும், தமது பட்டாக்கத்தி மந்திரியை நோக்கினார்.

"மந்திரி!" என்றார்.

"ஏன் அரசே? என்றார், மந்திரி.

**"கண்டேன், கண்டேன், மந்திரி!**
**கனவொன்று கண்டேன் மந்திரி!"**

என்று பாட ஆரம்பித்தார், கொட்டாப்புளி அரசர்.

**"என்ன கனவோ, அரசரே!**
**என்னிடம் சொல்லுவீர், அரசரே?"**

என்று மாற்றுப் பாட்டுப் பாடிக்கொண்டே கேட்டார், பட்டாக்கத்தி மந்திரியார்.

உடனே, "உம்மிடத்தில் சொல்லத்தான் போகிறேன். கேளும், நேற்று இரவு நான் படுக்கைக்குப் போனேனல்லவா? போய்ப் படுத்துக் கொண்டேன். அப்படியே தூங்கிவிட்டேன். அப்போது 'ஏ கொட்டாப்புளி' என்று ஒரு குரல் கேட்டது. திடுக்கிட்டேன். என்னுடைய பெயருக்கு முன்னால் உள்ள இவ்வளவு நீளப் பட்டத்தை விட்டுவிட்டு, இப்படி வெறுமனே என்னைக் கூப்பிட்ட அந்த மனிதன் யார்? என்று அறிய எண்ணினேன்," என்று அரசர் கூறும்போதே மந்திரி இடைமறித்து,

“அடே, அவனுக்கு என்ன, அவ்வளவு திமிர்! அவன் யார்? என்ன சொன்னான்?” என்று பதட்டத் துடன் கேட்டார்.

“கேளும் மந்திரி, பதட்டப்படாதீரும். நான் அவ னைத் திரும்பிப் பார்த்ததும், அவன் என்னை நோக்கி, ‘என்ன அரசரே, சௌக்கியமா? ராஜ்யம் எப்படி நடக்கிறது?’ என்று கேட்டான்.”

அந்த ஆள், தலையிலே ஒரு முண்டாசு கட்டி யிருந்தான். இடுப்பில் இரண்டு முழத்துண்டு; கையிலே ஒரு தடி; நெற்றியில் பட்டை பட்டையாக விபூதி. இவ்வளவையும் பார்த்தவுடன், அவன் ஒரு காவல்காரன் தான் என்று எண்ணி விட்டேன். உடனே, நான் அவனை நோக்கி, ‘ஏனப்பா, நீ யார் ? ஒரு காவல்காரனைப்போல இருக்கிறாயே?’ என்று கேட்டேன்.

‘ஆம், நான் ஒரு காவல்காரன்தான். உம்மைப்போல நான் ஒரு காலத்தில், குடிகளைக் காத்து வந்தேன். இப்போது சுடுகாட்டைக் காத்து வருகிறேன்’ என்று கூறினான், அவன்.



‘என்ன, சுடுகாடா! அங்கே நீ காவலா! எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! விளக்க மாகச் சொல்ல மாட்டாயா?’ என்று கேட்டேன்.

‘அதையும் சொல்லி விடுகிறேன். கேளும், நான் முன்பு அயோத்திமா நகரத்தை ஆண்டு வந்தேன். என் பெயர் **அரிச்சந்திரன்** என்பது. எப்பொழுதும் உண்மையே பேசுவது என்று நான் ஒரு விரதம் எடுத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது **விசுவாமித் திரன்** என்ற ரிஷி என்னிடம் வந்தான். வந்ததும், ‘நான் கேட்பதை நீ கொடுக்க வேண்டும்’ என்றான்.

‘என்னத்தைக் கேட்கப் போகிறான், இந்தத் தாடி வாலா? ஏதாவது யாகம் செய்ய வேண்டும்; அதற்கு வேண்டிய சாமான்கள் எல்லாம் தரவேண்டும் என்று தான் கேட்பான் என்று எண்ணினேன். அவன் கேட்ட படியே தருவதாக உறுதி கூறினேன்.

ஆனால், அந்தச் சண்டாள ரிஷி என்னுடைய ராஜ்யத்தையே தரும்படி கேட்டுவிட்டான்! நான் என் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டுமே, என்ன செய்வது? வேறு வழியின்றி, நாட்டை அவனிடம்



கொடுத்துவிட்டு, பெண்டாட்டி பிள்ளையுடன் வெளியேறி னேன். அப்போதுகூட அந்தத் தாடிப்பயல் என்னை விட வில்லை. பல கஷ்டங்களை உண்டுபண்ணினான். இதனால் நான் என்னுடைய பெண்டாட் டியையும், பிள்ளையையும் விற்கும்படியாயிற்று. கடைசி யாக, நானும் ஒருவனிடம்

அடிமையாகி, சுடுகாட்டைக் காவல் காக்கும்படி நேர்ந்தது. இதெல்லாம் எதனால் வந்தது என்று நினைக்கிறீர்?' என்று கேட்டான், அந்த மனிதன்.

உடனே நான், 'உண்மை பேசியதால் வந்த வினைதான்' என்றேன்.

"சபாஷ், அதைத்தான் நானும் உம்மிடம் எதிர் பார்த்தேன். நீரும் என்னைப்போல உண்மை பேசும் வழக்கத்தை வைத்திருக்கிறீரோ?" என்று கேட்டான், அந்த அரிச்சந்திரன்.

'நான் எப்போதும் உண்மை பேசுவதில்லையே, ஒரு சில சமயங்களில் தான் உண்மை பேசுவேன்' என்றேன், நான்.

அது சரி, இனிமேல், அந்த ஒரு சில சமயங்களில் கூட நீர் உண்மை பேசாதிரும். நீர் மட்டும் உண்மை பேசாதிருந்தால் போதுமா? உம்முடைய குடிகளையும் அப்படியே பழக்க வேண்டும். என்ன நான் சொல்லுவது புரிந்ததா?' என்று கேட்டான், அவன்.

'சரி, அதுதான் நல்ல வழி. அப்படிச் செய்யாததால் தான், என்னையும், என் மதியூகமந்திரியையும் பற்றிக் குடிகளெல்லாம் அவதூறாகப் பேசுகிறார்கள். இனி, தங்கள் யோசனைப்படியே நடக்கிறேன். இதோ கிளம்பிவிட்டேன்' என்று கூறிக்கொண்டே எழுந்தேன். கண்ணைத் திறந்ததும் காணவில்லை, அந்த அரிச்சந் திரனை! சுற்றி நான்கு பக்கங்களிலும், சுவர்கள் தான் இருந்தன! அப்போதுதான் நான் கண்டதெல்லாம் வெறும் கனவு என்று உணர்ந்தேன். 'என் அருமைப்

பட்டாக்கத்தி மந்திரியே' என்று முடித்தார், கொட்டாப் புளி மகாராஜா.

"அடே, நல்ல கனவாக இருக்கிறதே!" என்று மூக்கின் மேல் விரலை வைத்தார், பட்டாக்கத்தி மந்திரி.

"அது சரி, மந்திரி, இதற்கு என்ன செய்யலாம்? அரிச்சந்திரன் சொன்னதைப் பற்றி நீர் என்ன நினைக் கிறீர்?" என்று கேட்டார், கொட்டாப்புளி அரசர்.

"சொல்வதற்கு என்ன இருக்கிறது! அரிச்சந்திரன் சொன்னது 100–க்கு 100 உண்மைதான். 'போடா, நீ கேட்பதைத் தருவதாக நான் எப்படா சொன்னேன்?' என்று அரிச்சந்திரன் பொய் கூறியிருந்தால் இந்தக் கஷ்டமெல்லாம் வருமா? அது போகட்டும். நாம் இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்றுதானே கேட்கிறீர்கள்? நமது ராஜ்யத்தில் இன்று முதல் நாம் பொய்யை வளர்க்க வேண்டும். மெய்யை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும். பொய் பேசுகிறவர்களுக் கெல்லாம், அரசாங்க மரியாதைகள் செய்ய வேண்டும். மெய் பேசுகிறவர்களைச் சிறையில் போட வேண்டும். திரும்பத் திரும்ப மெய் பேசுகிறவர்களை அந்தமான் தீவுக்கு அனுப்ப வேண்டும். அப்புறமும் திருந்தாமல், விடாது மெய்யே பேசுகிறவர்களைத் தூக்கில் போட வேண்டும்" என்றார், மதியூக மந்திரி.

"பேஷ், உம்மைப்போல ஒரு மந்திரி இருக்கும் போது எனக்கு என்ன குறைச்சல்! என் பாக்கியமே

பாக்கியம்'' என்று பட்டாக்கத்தி மந்திரி முதுகில் தட்டிக் கொடுத்தார், நமது கொட்டாப்புளி மகாராஜா.

உடனே மந்திரி, "அரசே, இதற்கு நாம் முதலில் என்ன செய்ய வேண்டும், தெரியுமா? ஒரு பரிசு ஏற்படுத்த வேண்டும். பரிசு ரூபாய், 1,000 என்று வைக்கலாம். அந்த ரூபாயைப் பெற விரும்புகிறவர்கள் ஒரு கதை சொல்லவேண்டும். அந்தக் கதை ஒரே புளுகு மயமாக இருக்கவேண்டும். அதில், கொஞ்சங்கூட உண்மை கலக்கக்கூடாது. இதில், யார்வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம். நீங்கள் பார்த்து யார் நன்றாகப் புழுகு கிறான் என்று சொல்லுகிறீர் களோ, அவனுக்கே அந்தப் பரிசைக் கொடுத்து விடலாம்.



பரிசைக் கொடுப்பதோடு, அவனை யானை மீது ஏற்றி, தக்க மரியாதைகளுடன் அவனுடைய வீட்டுக்கு அனுப்பி வைக்கலாம். உங்களுக்குப் பிடித்தம் இல் லாத கதையைச் சொல்லுகிறவர்களுக்கு, அவரவர்கள் தகுதிக்குத் தக்கபடி தண்டனை கொடுக்கலாம். இந்த யோசனை தங்களுக்குப் பிடித்தமானால், இப்போதே தண்டோராப் போட ஏற்பாடு செய்கிறேன்'' என்றார்.

"அபாரம்! அபாரம்!! உமது யோசனையே யோசனை. நீர் சொல்லுவது போலவே இன்றே

ஏற்பாடு செய்யச் சொல்லும் '' என்றார், கொட்டாப் புளி மன்னர்.



"டும், டும், டுடும்... டும், டும், டு டும்... இதனால் சகல ஜனங்களுக்கும் தெரிவிப்பது என்ன வென்றால், நமது அரண்மனையில் நாளை முதல் ஒரு புளுகுப் போட்டி நடக்கப் போகிறது. யார் நல்ல புளுகுக் கதை சொல்லுகிறார் களோ, அவர்களுக்கு ரூபாய் 1,000 பரிசாகக் கொடுக்கப் படும். நன்றாகப் புளுகவில்லையானால், மகாராஜா சித்தம் போல் தண்டனை கொடுக்கப்படும். இது நமது மகாராஜாதி ராஜ, ராம ராஜ படே படே மகாராஜமன்னி சுல்தான், வில்லாதி வில்லன், மன்னாதி மன்னன் அதிதீர சூரவீர பராக்கிரம கொட்டாப்புளி மகாராஜாவின் கட்டளை. டும், டும், டும் டும்,'' என்று தண்டோராச் சப்தம் கேட்டது.

இந்தத் தண்டோராவைக் கேட்ட ஜனங்கள் எல் லோரும் எப்படி அந்த 1000 ரூபாயைப் பெறுவது



என்று மூளையைப் போட்டுக் குழப்ப ஆரம்பித்துவிட் டார்கள். சிலர் ஆகாசப் புளுகன், அண்டப்புளுகன், பச்சைப்புளுகன் கதைகளை யெல்லாம் படிக்க ஆரம்பித் தார்கள். சிலர் சங்கங்கள் ஆரம்பித்து, எப்படிப் புளுகு வது என்று யோசனைகள்

செய்யலானார்கள். மேலும், சிலர், தங்கள் குழந்தைகளுக்குப் புளுகுகளையே சொல்லிக் கொடுக்கும்படி உபாத்தியாயர்களிடம் முறையிட்டார்கள். இப்படி எவ்வளவோ வழிகளில் புளுகு பெருக ஆரம்பித்தது. ஒவ்வொருவரும் 1000 ரூபாய் பரிசை நினைத்துக் கொண்டே புளுகக் கற்றுக்கொண்டார்கள்.

நன்றாகப் புளுகக் கற்றுக் கொண்டவர்களெல்லாம் அன்று முதல் அரண்மனைக்கு வந்தார்கள். வந்து வாசலில் இருந்த மணியை அடித்தார்கள். உடனே, மந்திரி வந்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். அரசன் முன் அவர்கள் புளுகுக் கதைகளைக் கூறினார்கள். ஆனால், அவர்களில் யாருக்குமே பரிசு கிடைக்கவில்லை. பாவம், தண்டனை தான் கிடைத்தது!

மேலும், மேலும் ஜனங்கள் வந்து போட்டியில் கலந்து கொண்டார்கள். விதம் விதமான புளுகுக் கதைகளையெல்லாம் சொல்லலானார்கள்.

ஒருவன், "அரசே, நான் தூங்கும் போது இந்திரன் ஒரு மயில் வாகனத்தில் வந்து, என்னை வலை போட்டுப் பிடித்துக் கொண்டு போனான். சுவர்க்க லோகத்தை அடைந்ததும், பரமசிவன் சித்திரகுப்தரைக் கூப்பிட்டு 'இவன் என்ன குற்றம் செய்தான்?' என்று கேட்டார். 'இவன் பெருமாள் கோயிலை தினம் நான்கு தடவைகள் அப்பிரதட்சணமாகச்



சுற்றிவந்தான்' என்றான், சித்திரகுப்தன். உடனே பரமசிவன், 'அடபாவி இவன் அப்படியா செய்தான்! சரி இவனை நம்முடைய கருட வாகனத்தில் ஏற்றிக் கொண்டு போய் பூலோகத்தில் தள்ளுங்கள்' என்று கட்டளையிட்டார். உடனே, கருடன் மீது ஏற்றினார்கள். கீழே தள்ளினார்கள். ''இப்பொழுதுதான் அரண்மனை வாசலில் விழுந்து, எழுந்து இங்கே தங்களிடம் வருகிறேன்'' என்று கதையை முடித்தான்.

உடனே, கொட்டாப்புளி அரசர், "சே, சே, இது என்ன கதை! இவனைக் கொண்டு போய் மூன்று மாதம் சிறையில் போடுங்கள்'' என்று கட்டளை யிட்டார்.

மற்றொருவன் வந்தான். அவன் ஒரு கவிஞன். அவன் அரசர் எதிரில் வந்ததும், "கவிஞனே, நீ இப் பொழுது புளுகலாம்" என்றார், கொட்டாப்புளி மன் னர். "வசனத்தில் புளுகலாமா? அல்லது கவிதையில் புளுகலாமா?'' என்று கேட்டான், அந்தக் கவிஞன்.

"எதில் வேண்டுமானாலும் புளுகு. எமக்கு வேண்டி யது புளுகுதான்" என்றார், அரசர்.

உடனே அந்தக் கவிஞன், தமது கதையைக் கவிதை யாகவே கூற ஆரம்பித்தான்.

**"சக்கரம் இல்லா வண்டியிலே**
**தலையில் லாத ஒரு மனிதன்,**
**காலில் லாத மாடுகளைக்**
**கட்டி விட்டான், ஹை, ஹை, ஹை.**

**கொம்பை வெட்டி அதனாலே**
**குடலை வெளியில் எடுத்திடவே**
**சந்தோ ஷத்துடன் மாடுகளும்**
**தாவின. தாவின, ஜாம், ஜாம், ஜாம்.**

**கண்டேன், இதனைக் கண்ணாலே,**
**கண்டது சாத்தியம், சாத்தியமே"**

*என்று அவன் பாடி முடித்ததும்.*

**"இதுவும் கதையோ, ஹஹ், ஹஹ், ஹா,**
**ஏனோ நிற்கிறாய்? போ, போ, போ."**

*என்று அவனை விரட்டி விட்டார், கொட்டாப்புளி ராஜா. நல்ல வேளையாக அவனுக்குத் தண்டனை ஒன்றும் கிடைக்கவில்லை.*

*இந்த மாதிரி எத்தனையோ பேர்கள். ஒருவருக் காவது பரிசு கிடைக்கவில்லை!*

*இது இப்படியிருக்க, அதிரேசபுரத்தைக்* **கருப்பட்டி மகாராஜா** *என்று ஒரு ராஜா ஆண்டு வந்தார். அவரி டத்தில்* **வெல்லக்கட்டி மந்திரி** *என்று ஒரு மந்திரியும்* **சக்கரைக் கட்டி** *என்ற ஒரு விதூஷகனும் இருந்தார்கள். ஒருநாள், கருப்பட்டி மகாராஜா விதூஷகனைக் கூப்பிட்டு, "ஓய், விதூஷகரே, நீர் பேசும் பேச்சு விகடமாகவே இல்லை. நீர் எதையாவது விகடம் என்று நினைத்துக் கூறுகிறீர். கூறிவிட்டு நீர் மட்டும் தான் சிரிக்கிறீர். ஆனால், எமக்கோ, அல்லது எமது சபையில் உள்ளவர்களுக்கோ சிரிப்பு வரவே இல்லை.*



கிச்சுக் கிச்சு மூட்டினால் கூட சிரிப்பு வராது போலிருக்கிறது. உம்மால் எமக்குச் செலவு தானே தவிர, பொழுது போக வழியே இல்லை. ஆகையால் நாமும், நமது வெல்லக்கட்டி மந்திரியும் சேர்ந்து உம்மை வேலையை விட்டு நீக்குவதாகத் தீர்மானித் திருக்கிறோம். இன்னும் 24 மணி நேரத்திற்குள் நீர் அரண்மனையை விட்டுச் சென்றுவிட வேண்டும். சம்பளப் பாக்கி, அலவன்ஸ், ஏதாவது வரவேண்டியதிருந்தால், கஜானாவில் வாங்கிக் கொண்டு போய் வாரும்" என்று கட்டளையிட்டார்.

உடனே, விதூஷகனின் கண் கலங்கிவிட்டது. கீழே விழுந்து, கருப்பட்டி மன்னரின் காலைப்பிடித்துக் கொண்டு, "மாட்சிமை தங்கிய மன்னர்பிரானே, தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. எனக்கு ஒரு வருஷம் தவணை கொடுங்கள், தேசாந்திரம் போய் பல விஷயங்களை அறிந்துகொண்டு வருகிறேன். அப்புறம் பாருங்கள், என் விகடத்தையெல்லாம். தாங்கள் இத்தடவை மன்னித்து விடுங்கள். தங்கள் தயவு இல்லாவிட்டால் நான் எப்படி வாழ்வது? தூக்குப் போட்டுக்கொண்டு சாவதைத் தவிர வேறு வழியே இல்லை. தயவு செய்யுங்கள்" என்று கெஞ்சினான்.

அப்போது, அங்கிருந்த வெல்லக்கட்டி மந்திரி , "ஆம் அரசே, பாவமாக இருக்கிறது. விதூஷகருக்கு

வயது இப்போதுதானே 25 ஆகிறது. உலக ஞானம் குறைவுதானே. பல இடங்களுக்கும் சென்று பல விஷயங்களைக் கண்டு, அனுபவம் பெற்று வருவது நல்லதுதான். தேசாந்தரம் போக இப்போது நாம் அனுமதி கொடுப்போம். அப்புறமும் இந்த மாதிரியே இருந்தால், வீட்டுக்கு அனுப்பிவிட்டால் போகிறது. ஒரு வருஷம் லீவு கொடுத்து அனுப்புவதே நலம் என்று நான் நினைக்கிறேன். அதையே தங்களிடம் சிபார்சு செய்கிறேன்.'' என்றார். அதற்குக் கருப்பட்டி மகாராஜாவும் ஒப்புக்கொண்டார். ஒரு வருஷத் தவணையுடன் புறப்பட்டான், விதூஷகன்.

விதூஷகன் ஊரூராகச் சுற்றினான். தேசம் தேசமாக அலைந்தான். கடைசியாக நமது கொட்டாப்புளி மகாராஜாவின் பட்டாளபுரிக்கு வந்தான். வந்ததும் வீதியில் நின்ற ஒரு சாஸ்திரியாரைப் பார்த்தான்.

“இந்த ஊரில் ஏதாவது விசேஷம் உண்டா?'', என்று கேட்டான், விதூஷகன்.




சாஸ்திரியார் புளுகுப் போட்டியைப் பற்றி அறிவித்தார். உடனே, விதூஷகனுக்கு ஓர் எண்ணம் உதித்தது. “நாம் இந்தப் புளுகுப் போட்டியில் ஜெயித்துவிட்டால் ரூபாய் ஆயிரம் கிடைக்கும். அதோடு நமக்கு நல்ல பெயரும் கிடைக்கும். நமது கருப்பட்டி

மகாராஜா இதைக் கேள்விப்பட்டால், நம்மை நன்றாக வரவேற்பார்'' என்று எண்ணினான்.

அன்றிரவு ஒரு சத்திரத்தில் தங்கியிருந்தான். இரவு முழுவதும் எப்படிப் புளுகுவது என்று யோசனை செய்து கொண்டேயிருந்தான். தூங்கவேயில்லை. கடைசியாக ஒரு புளுகுக்கதை அவனுடைய யோசனையில் தோன்றியது. கதையை அவன் மனத்துக்குள் பல தடவைகள் சொல்லிப் பார்த்துக்கொண்டான்.

விடிந்ததும் வேகமாகக் குளித்தான்; ஆகாரத்தை முடித்துக்கொண்டான்; நேராக அரண்மனைக்குச் சென்றான்; முன்னால் கட்டியிருந்த மணியை ஓங்கி ஓங்கி அடித்தான். பலமான அந்த மணிச் சப்தம் கேட்டு ஊராரே அங்கு வந்து கூடிவிட்டார்கள். அப்போது பட்டாக்கத்தி மந்திரியும் அங்கே வந்தார். வந்து, விதூஷகனை உள்ளே அழைத்துச் சென்று, அரசர் முன் கொண்டுவந்து விட்டார்.

அரசரையும், மந்திரியையும் பார்த்துக்கொண்டே அந்த விதூஷகன், ''அறிவு மிக்க அரசரே, மதியூக மந்திரியே, எனது தாழ்ந்த வணக்கம்'' என்றான்.



இதைக் கேட்ட கொட்டாப்புளி ராஜாவுக்கு மிகுந்த ஆச்சரியமாகப் போய்விட்டது.

உடனே, பட்டாக்கத்தி மந்திரியைத் தம் பக்கம் அழைத்தார்.

அவர் காதுக்குள்ளே "என்ன மந்திரி இவன் நன்றாகப் புளுகுவான் போலிருக்கிறது. இவனுக்குத்தான் பரிசு கிடைக்கு மென்று நினைக்கிறேன். ஏன் தெரியுமா? ஜனங்களெல்லாம் நம்மை மூளையில்லாதவர்கள் என்று கண்டும் காணாமலும் கூறுகிறார்கள். ஆனால், இவன் மட்டும் நம்மைப் பார்த்து, அறிவு மிக்க அரசரே, மதிமிக்க மந்திரியே என்கிறானே. இவன் எவ்வளவு கெட்டிக்காரப் புளுகனாக இருக்கவேண்டும் என்று நீரே யோசித்துப் பாரும். நிச்சயம் இவனுக்குத் தான் பரிசு கிடைக்குமென்று நான் நினைக்கிறேன்" என்று கூறினார்.

அதற்குப் பட்டாக்கத்தி மந்திரி, "ஆம் அரசே, எனக் கும் அப்படித்தான் தோன்றுகிறது. அவன் கதையைச் சொல்லட்டும். முடிவைப் பார்த்துப் பரிசு கொடுக்க லாம்'' என்று ஒத்தூதலானார்.

உடனே, கொட்டாப்புளி மகாராஜா விதூஷகனை நோக்கினார். "சரி, உமது கதையை இப்போது ஆரம்பிக்கலாம். நாமும் நமது பட்டாக்கத்தி மந்திரி யும் செய்யும் தீர்ப்பே முடிவானது. நீர் நன்றாகப் புளுகாவிடில் சிறைத் தண்டனை கிடைப்பது நிச்சயம். சம்மதந்தானா?" என்று கேட்டார்.

"ஆம், மேன்மை தங்கிய மன்னர்பிரானே, அதற்குச் சித்தமாகவே வந்திருக்கிறேன். கதையை ஆரம்பிக்க லாமா?'' என்று பணிவாகக் கேட்டான், விதூஷகன்.

"சரி. ஆரம்பியும்'' என்றார், கொட்டாப்புளி மன்னர்.

சக்கரைக்கட்டி விதூஷகன் கதையைக் கட கட' என்று சொல்ல ஆரம்பித்து விட்டான்:

அப்போது எனக்கு வயது 75 இருக்கும். என் தாயார் என்னிடம் வந்து, 'அப்பா நீ பச்சைக் குழந்தை . இந்தத் தள்ளாத வயதிலே நீ ஒரு வேலையும் செய்ய வேண்டாம். நீ நம்ம வீட்டுக்குள்ளேயே நாலு மூலையிலும், நாலு எறும்புப் புத்தை வளர்த்து வா. அதுதான் உன் உடம்புக்கு நல்லது' என்றாள்.

'தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை' என்று அகஸ்தியமா முனிவர் பெரிய புராணத்தில் கூறி யிருக்கிறபடி எறும்புப் புற்றுக்களை வளர்க்க ஆரம் பித்தேன். தினசரி காலையில் எழுந்ததும் எறும்புகளை யெல்லாம் வெளியே ஓட்டிக் கொண்டு போய் புல் தரையிலே மேயவிடுவேன். சாயங்காலம் அவைகளை ஓட்டிக்கொண்டு வந்து புற்றிலே அடைத்து வைப் பேன்.

இப்படியே தினம் தினம் செய்துவரும்போது, ஒரு நாள் எறும்புகளெல்லாம் சரியாய் இருக்கின்றனவா என்று எண்ணிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! 2 எறும்புகளைக் காணோம்! திட்டக் குறைச்சல் வந்து விட்டது! உடனே, எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அம்மா வந்து அடிப்பாளே என்று நினைத்தேன். உடனே, ஓட்டம் ஓட்டமாக ஓடினேன் அங்கே கட்டிக் கிடந்த வாத்துக்குச் சேணத்தை மாட்டினேன். ஏறி உட்கார்ந்தேன், அதன் மேலே, விட்டேன், சவாரி.

போனேன், போனேன், போய்க்கொண்டேயிருந் தேன், தேடினேன், தேடினேன், தேடிக்கொண்டேயிருந் தேன். ஆனாலும், அந்தக் காணாமற்போன எறும்பு களைக் காணவே இல்லை.

மேலும், மேலும் தேடிக்கொண்டே போனேன். வழியில் ஒரு சமுத்திரம் குறுக்கிட்டது. சமுத்திரத்தைத் தாண்டி அக்கரை போக வேண்டும். உடனே, என்னுடைய வாத்தின் கழுத்தைத் திருகினேன். வலி தாங்காமல் வாத்து அப்படியே அந்தச் சமுத்திரத்தை ஒரே தாண்டாகத் தாண்டியது.

அக்கரைக்குச் சென்று விட்டோம். அந்தக் கரை யிலே ஒரு ராஜா உழுது கொண்டிருந்தார். கூர்ந்து பார்த்தேன். என்ன திமிர்! என்னுடைய எறும்புகளை அவருடைய கலப்பையில் பூட்டி உழுது கொண்டிருந்த தைக் கண்டேன். உடனே, எனக்குக் கோபம் கோப மாக வந்துவிட்டது. அவரை நெருங்கிச் சென்றேன். கையை வேகமாக ஓங்கினேன். விட்டேன், அவருக்கு ஒரு அறை. ராஜாவுக்கு அழுகை, அழுகையாக வந்தது. உடனே, அவர் என் காலில் விழுந்தார். நான் பண்ணியதெல்லாம் தப்பு, தப்பு, தப்பு என்று கன்னத் தில் போட்டுக் கொண்டார். பிறகு, எறும்பு களை அவிழ்த்து என்னிடம் ஒப்பித்து விட்டு "ஐயா, நான் இந்த எறும்புகளை



உபயோகித்ததற்காக இதை ஏற்றுக்கொள்ள வேண் டும்.'' என்று கூறி ஒரு மூட்டை அரிசியைச் செடிகளி லிருந்து பிடுங்கி வந்து என்னிடம் கொடுத்தார். அதை ஏற்றுக் கொண்டேன்.

இப்பொழுது, வாத்துக்கு ஓய்வு கொடுக்க எண்ணி னேன். ஆகையால், அரிசி மூட்டையை இரண்டு எறும்புகளின் மீதும் ஏற்றினேன். மூட்டை யின் மேல் வாத்தை உட்கார வைத்தேன். வாத்தின் மீது நான் உட்கார்ந்து கொண்டேன். சமுத்திரத்தைத் தாண்டி வரும்போது ஒரு எறும்புக்குப் பசி உண்டாகிவிட்டது. மூட்டையின் மூலையைக் கடித் தது. உடனே, ஐயோ! மூட்டையிலிருந்த அரிசி முழு வதும் சமுத்திரத்தில் கொட்டிவிட்டது. சரி, பாரம் குறைந்தது என்று எண்ணி மறு கரைக்கு வந்தோம். அப்போது இருட்டி விட்டது. கடற்கரையிலேயே தங்கிவிட எண்ணினேன்.

எறும்புக்குப் புல்லும், வாத்துக்கு வைக்கோலும் போட்டேன். நாலு புல்லை நட்டு வைத்து, அதன் மேல் ஒரு பேப்பரை விரித்துக்கொண்டு நானும் படுத்துவிட்டேன். அப்படியே தூங்கிப் போனேன்.

'பல பல' என்று விடிந்தது. அப்போதுதான் சந்திரன் உதயமாகிக்கொண்டிருந்தான். உஷ்ணம் தாங்காமல் எழுந்தேன். எழுந்து பார்த்ததும் எனக் குத் தூக்கி வாரிப் போட்டது.

என்னுடைய எறும்புகளை ஒரு மட ஓநாய் கொன்றுவிட்டதை அறிந்தேன். எறும்புகளின் ரத்தம் எங்கும் சிதறி முழங்கால் அளவுக்குக் கிடந்தது. அந்த

ரத்தத்தை அள்ளிக் கட்டிகொண்டு வர நினைத்தேன். அரிசியிருந்த சாக்குப் பொத்துப் போயிருந்தது. அதனால், பக்கத்துக் காட்டிற்குச் சென்றேன். அங்கே ஒரு மான் ஒற்றைக்காலில் நின்று கொண்டு, நாட்டியம் ஆடிக்கொண்டிருந்தது.

உடனே, நான் என்னுடைய வாத்தை ஏவினேன். வாத்து மானின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தது. மான் உடனே இறந்து கீழே விழுந்து விட்டது. மானின் தோலை 'விறு விறு' என்று கழற்றினேன். அதில் ஓர் அழகான பை தைத்தேன். அதற்குள் ரத்தத்தை யெல்லாம் அள்ளிக் கட்டிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தேன்.

வீட்டுக்குள் நுழைந்தது தான் தாமதம். உடனே, என் தாயார் ஓடிவந்து, "டேய், உனக்கு அப்பா பிறந்திருக்கிறார்டா. இதோ பாரடா" என்று சொல்லி அப்பாவைத் தூக்கி வந்து என்னிடம் காட்டினாள்.

அப்பாவுடன் நான் கையைத் தட்டி விளையாடிக் கொண்டிருக்கும்போது, என் பாட்டி வந்து "பேராண்டி, நீ போய் கொஞ்சம் கங்கா தீர்த்தம் கொண்டு வா. குழந்தைக்குக் கொடுக்க வேணும். சீக்கிரம் போய் வாடா, கண்ணு" என்று சொன்னாள்.



"தாத்தாவைப் போகச் சொல். நான் அப்பாவோடே

கொஞ்ச நேரம் விளையாடிக் கொண்டிருக்கின்றேன்.'' என்று பதில் சொன்னேன்.

பாட்டி விடவில்லை. "இல்லையப்பா. நீ நல்ல பிள்ளையல்லவா? தாத்தா பள்ளிக்கூடம் போயிருக் கிறார். இன்னும் வரவில்லை. நீ போயிட்டு சீக்கிரம் வந்திரு" என்று என் தாடையைப் பிடித்துத் தாங்கினாள்.

"சரி, நான் போய் வருகிறேன். குழந்தையைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளுங்கள். வீதியில் கார், வண்டி அதிகமாக இருக்கிறது. கடவுள் கிருபையால், குழந்தைக்கு எல்லா நலன்களும் கிட்டட்டும்" என்று ஆசீர்வாதம் செய்துவிட்டு நேரே கிளம்பினேன், கங்கைக்கு.

கங்கையை அடைந்ததும், தண்ணீர் எடுக்கக் கையை நீட்டினேன். ஆனால் முடியவில்லை. கங்கை பொங்கி ஆகாயத்தை முட்டிக்கொண்டு நின்றது. ஆகாயத்துக்குப் போய், தீர்த்தம் எடுத்துவர எண்ணினேன். எப்படிப் போவது என்று யோசனை செய்தேன். அப்பொழுது, 'சட்'டென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது.

முன்பு நான் அரிசி கொட்டினேனல்லவா? அந்தச் சமுத்திரத்துக்குப் போனேன். நான் கொட்டி விட்டுப் போன அரிசியெல்லாம் முளைத்து, அந்தக் கதிர்களெல் லாம் வானளாவி நின்றன. உடனே நான் என்ன செய்தேன், தெரியுமா? ஒரு கதிரைப் பிடித்துக் கொண்டு "விறு விறு" என்று மேலே ஏறினேன். வானுலகத்தை அடைந்தேன்; ஆனந்தம் அடைந்தேன்.

நான் சென்ற உடனே, எனக்கு முன்னால் ஒரு அழகிய தேவதை நின்றது. "வாங்க, வாங்க. நீங்க போட்ட பயிரால் இந்தத் தேவலோகத்துப் பஞ்சமே தீர்ந்து போச்சுது'' என்று கூறி வரவேற்றது. சும்மா வரவேற்கவில்லை. என்



கழுத்திலே அறுபது பாகம் மாலை ஒன்றையும் போட்டு வரவேற்றது, அத்துடன் விட்டதா? என்னை உடனே தேவேந்திரனிடத்தில் அழைத்துக்கொண்டு போய்விட்டது.

இந்திரனும், மற்ற தேவர்களும் எழுந்து நின்று எனக்கு மரியாதை செலுத்தினார்கள். உடனே, என்மேல் பூமாரி பொழிந்தார்கள்.

'வருக, வருக, தங்கள் வரவு நல்வரவாகுக' என்று கூறி, தேவேந்திரன் என் கைகளைப் பிடித்துக் குலுக்கி வரவேற்றான். அங்கிருந்த ஓர் ஆசனத்தில் அமரும்படி கேட்டுக் கொண்டான்.

'ஏ, தேவதை, நீ போய் தேவாமிர்தம் கொண்டுவந்து இவருக்குக் கொடு. தாகம் தணியட்டும்'' என்று தேவதையைப் பார்த்துக் கட்டளையிட்டான், தேவேந்திரன்.

தேவாமிர்தம் வந்தது. குடித்துவிட்டு இருக்கும் போது, தேவேந்திரன் என்னை நோக்கி, " இவ்வளவு

தூரம் சிரமம் எடுத்து இங்கு வந்த காரணம் என் னவோ!'' என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை. கொஞ்சம் கங்கா தீர்த்தம் வேண்டும்'' என்றேன்.

உடனே தேவேந்திரன் 2 சொட்டுத் தண்ணீரைக் கொண்டுவந்து என் உள்ளங்கையில் வைத்தான். நேரம் அதிகமாகிவிட்டதால், தாமதியாது புறப்பட எண்ணினேன். இந்திரன் கூட மத்தியானம் விருந்து சாப்பிட்டுவிட்டுப் போகும்படி வேண்டினான். நேர மில்லை என்று கூறிவிட்டுப் புறப்பட்டேன்.

உள்ளங்கையில் பத்திரமாக கங்கா தீர்த்தத்தை வைத்துக்கொண்டேன். கீழே திரும்பி வரப் பார்த் தேன். ஆனால், முன்பு நான் ஏறி வந்த நெற்கதிர் அங்கு இல்லை! பலமாக ஒரு காற்று அடித்ததாம். அதில் கதிர்கள் எல்லாம் சாய்ந்து விட்டனவாம். இதை அறிந்ததும் எனக்குக் கலக்கம் ஏற்பட்டுவிட்டது. பூலோகத்துக்கு எப்படிப் போவது என்று யோசித்தேன்.



அப்போது திடும்மென எனக்கு ஒரு யோசனை தோன்றியது. தலை மயிரில் சிலவற்றை எடுத்தேன். ஒன்றோடு ஒன்றைச் சேர்த்துக் கட்டினேன். இந்திரனுடைய வீட்டு வாசல் கதவில் ஒரு மூலையை முடிந்தேன். மற்றொரு மூலையைக் கீழே தொங்கவிட்டேன். அது சரி யாகத் தரையைத் தொட்டுக் கொண்

டிருந்தது. உடனே, அந்த மயிரைப் பிடித்துக் கொண்டு விறு, விறு என்று கீழே இறங்கி பூலோகத்தை அடைந்துவிட்டேன்.

கீழே வந்ததும், நன்றாக இருட்டிப் போய்விட்டது. அப்பொழுது குளிர் அதிகமாக இருந்தது. ஆகையால் கடற்கரை அருகே போய் உட்கார்ந்து கொண்டு, என் கையில் இருந்த சுருட்டையும் கொளுத்திப் பக்கத்தில் வைத்துக் கொண்டேன். அப்படிக் குளிர் காய்ந்தபடியே தூங்கி விட்டேன்.

எழுந்து பார்த்தபோது ஒரே புகைமயமாய் இருந்தது. சுற்று முற்றும் பார்த்தேன். ஒன்றும் தோன்றவில்லை. தற்செயலாகக் கடல் தண்ணீரில் பார்த்தேன். அப்போது தான், என் தலைமயிரில் தீப் பிடித்து எரிவது தெரிந்தது. எப்படித் தீயை அணைப்பது என்று யோசித்தேன். உடனே, அருமையான யோசனை தோன்றிற்று. கடற்கரையிலேயே ஒரு குழியைத் தோண்டினேன். அதற்குள் சிறிது நேரம் தலைகீழாக நின்றேன். நல்லவேளையாகத் தீ அணைந்து விட்டது.

பிறகு தலையைத் தூக்கிக்கொண்டு எழுந்த போது தான், "ஐய்யய்யோ, நேரமாப் போச்சே. அப்பா கங்கை ஜலம் வல்லையேன்னு அழுவாரே " என்பது ஞாபகத்துக்கு வந்தது. வேக வேகமாக நடந்தேன். வீட்டை நோக்கிப் போய்க் கொண் டிருந்தேன்.

வரும் வழியிலே, என் அப்பா வாயிலே ஒரு சுருட்டை வைத்துக் கொண்டு எதிரே வந்துவிட்டார். என்னைக் கண்டதும், "ஏண்டா தடிப்பயலே எவ்வளவு



நேரம் நான் காத்துக்கிட்டே, இருக்கிறது?'' என்று ஓங்கி ஓர் அறை கொடுத்தார்.

உடனே, நான் கன்னத்தைத் துடைத்துக் கொண்டு, கையிலிருந்த கங்கை நீரை அவர் வைத்திருந்த சங்கில் ஊற்றிக் கொடுத்தேன். 'மடக் மடக்' என்று குடித்துக் கொண்டே இருந்தார்.


எனக்கு மிகவும் தாகமாக இருந்ததால், நானும் ஒரு சொம்பை எடுத்துக்கொண்டு கிணற்றுக்குப் போனேன். தண்ணீர் மிகவும் ஆழத்தில் இருந்தது. குனிந்து தண்ணீர் எடுக்கும்போது தலை கழன்று கிணற்றுக் குள்ளே விழுந்துவிடாமல் இருக்கவேண்டுமே என்று நினைத்தேன். உடனே, தலையைக் கழற்றினேன். பக்கத்தில் இருந்த ஒரு கல்லின் மீது தலையைப் போட்டுவிட்டு தண்ணீர் இறைத்தேன். தண்ணீரைக் குடித்துவிட்டு ஓட்டமும் நடையுமாக என் அப்பா இருந்த இடத்துக்கு ஓடிவந்தேன்.

என்னைக் கண்டதும் என் அப்பா, " ஏண்டா, என் தங்கக் கட்டியே, உன் தலை எங்கேயடா? காணோம்!'' என்று கேட்டார்.

உடனே, "என்ன! தலையைக் காணோமா? என்று சந்தேகப்பட்டுக்கொண்டே, மேலே கையை வைத்துப்

பார்த்தேன். அப்பா சொன்னதுபோல் உண்மையிலேயே தலையைக் காணோம்! யோசித்துப் பார்த்தேன்.

"ஓ! மறந்தே போய்விட்டது. கிணற்றடியிலேயே வைத்துவிட்டு வந்து விட்டேன்'' என்று கூறிக் கொண்டே திரும்பவும் கிணற்றங்கரைக்கு ஓட்டம் ஓட்டமாக ஓடினேன்.



கிணற்றடிக்குப் போனதும் நான் கண்டது என்ன? ஒரு நரி என் தலையை உருட்டிக் கொண்டே, மூளையை ருசி பார்ப்பதைத்தான் கண்டேன். இதைப் பார்த்ததும், என் கண்க ளிலே கோபப் பொறி பறந்தது; மீசை துடித்தது; பல்லை நறநறவென்று கடித்துக் கொண்டே, காலைத் தூக்கினேன். கொடுத்தேன் ஓர் உதை, அந்த நரிக்கு.

அதற்கு மேலும் அந்த நரி அங்கே நிற்குமா? என் தலையை எறிந்து விட்டு நாலுகால் பாய்ச்சலில் விட்டது, ஓட்டம். அப்படி அது என் தலையை எறிந் ததல்லவா? அப்போது அந்தத் தலையுடன்கூட ஓர் அழகான புத்தகத்தையும் எறிந்துவிட்டு ஓடியது. புத்தகத்தைப் பார்த்ததும் எனக்கு அதன்மேல் மிகுந்த ஆசை உண்டாகிவிட்டது. உடனே, அதை எடுத்தேன்; அதில் என்ன எழுதி இருக்கிறது என்று பார்த்தேன்; உரக்கப் படித்தேன்.

“இந்தப் புத்தகத்தைப் படிக்கும் மஹாத்மாவே! இது தேவ வாக்கு. உனக்கு அபாரமான யோகம் வந்துவிட்டது. கொட்டாப்புளி மகாராஜா வைத் திருக்கும் புளுகுப்போட்டியில் உனக்குத்தான் முதல் பரிசு. அடித்தாய், ஆயிரம் ரூபாய்! சபாஷ்!'' என்று அதில் எழுதி இருந்தது.

உடனே, அவசர அவசரமாகத் தலையை எடுத்து மாட்டிக்கொண்டு, நேராகத் தங்கள் சமூகத்துக்குத் தான் வருகிறேன். “மகாராஜாதி ராஜ ராமராஜ, படே படே மகாராஜ மன்னி சுல்தான் வில்லாதி வில்லன், மன்னாதி மன்னன், அதி தீர சூர வீர பராக்கிரம கொட்டாப்புளி மகாராஜாவே” என்று சொல்லிக் கதையை முடித்தான், சர்க்கரைக்கட்டி விதூஷகன்.

இந்தக் கதையைக் கேட்டதும், கொட்டாப்புளி அரசருக்கும், பட்டாக்கத்தி மந்திரிக்கும் தாங்க முடி யாத சந்தோஷம் வந்துவிட்டது. இருவரும் ஏக காலத்தில் சபாஷ்,' போட்டுக்கொண்டே விதூஷகனைத் தட்டிக் கொடுத்தார்கள்.



பிறகு, கொட்டாப்புளி ராஜா, “மந்திரி, இவரைப் போலப் புளுகுவோர் இந்த உலகத்தி லேயே யாரும் இருக்கமுடியாது. ஆகையால் பரிசு ரூபாய் ஆயிரத் தையும் இவருக்கே கொடுத்து, தக்க மரியாதைகளுடன்

ஊர்வலம் நடத்த ஏற்பாடு செய்யும்" என்று கட்டளை யிட்டார்.

உடனே, பட்டாக்கத்தி மந்திரி பரிசு ரூபாய் ஆயிரத் தையும் கொட்டாப்புளி அரசரிடம் கொண்டு வந்து கொடுத்தார். அரசர் அதை வாங்கி, சக்கரைக்கட்டி விதூஷகனிடம் கொடுத்தார்.

ஆயிரம் ரூபாய் என்றால் சும்மாவா கிடக்கிறது! அதிலும் அரசர் கொடுத்த போட்டிப் பரிசு என்றால் சாமான்யமா? சர்க்கரைக்கட்டி விதூஷகன் அப்படியே சொக்கிப்போய் விட்டான்.

அன்று மாலை, ஊர்வலம் ஏகத் தடபுடலாக நடந்தது. யானை மீது விதூஷகன் உட்கார்ந்திருந் தான். கழுத்தில் அழகான மாலை போடப்பட்டிருந் தது. சுற்றிலும் மேள தாளங்கள். வீதிகளிலெல்லாம் ஒரே ஜனக்கூட்டம்.

ஊர்வலம் முடிந்ததும் கொட்டாப்புளி அரசரிடம் வந்தான், விதூஷகன். ''மகாராஜாவே, நான் என் அரசரிடம் போகவேண்டும். விடை தாருங்கள்" என்று கேட்டான்.

"உமது அரசரா! அவர் யார்?'' என்று ஆச்சரியமாகக் கேட்டார், கொட்டாப்புளி மன்னர்.

உடனே விதூஷகன் தன் சரித்திரம் முழுவதையும் கூறினார். இதைக்கேட்டதும், கொட்டாப்புளி மன்னர், 'பூ! இதற்கென்ன பிரமாதம். நீர் எங்குமே போக வேண்டாம். நமது அரண்மனையிலேயே இருந்து

விடும். உமக்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் நானே செய்து தருகிறேன். அந்த அரச னுக்கு வேண்டுமானால் ஒரு கடிதம் எழுதி அனுப்பி னால் போச்சு'' என்று ஆறுதல் கூறினார்.

இதைக் கேட்டதும் விதூஷகனுக்கு ஆனந்தம் இன்னும் அதிகமாகிவிட்டது. "சரி, அப்படியே. தங்கள் பேச்சுக்கு மறு பேச்சுவேறா?" என்றான்.

உடனே, கொட்டாப்புளி மகாராஜா கருப்பட்டி மகாராஜாவுக்கு இது பற்றிக் கடிதம் எழுதி அனுப் பினார்.

கடிதம் கிடைத்ததும் கருப்பட்டி மகாராஜா படித் துப் பார்த்தார். உடனே, அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. வெல்லக்கட்டி மந்திரியிடம் அந்தக் கடி தத்தைக் காட்டினார். அவரும் படித்தார். அவருக்கும் சிரிப்பு வந்துவிட்டது.

"வெல்லக்கட்டி மந்திரியே, என்ன சிரிக்கிறீர்?" என்று கேட்டார், கருப்பட்டி மகாராஜா.

''ஒன்றுமில்லை. இந்த மாதிரி முட்டாள் ராஜாக் கள் இருக்கும்வரை நமது விதூஷகன் பாடு கவ லையே இல்லை'' என்றார், மந்திரி.

உடனே, இருவரும் சேர்ந்து 'கட கட' என்று சிரிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.





# காந்தித் தாத்தா

'சீதா' எழுதியது

காந்திஜியின் வாழ்க்கையில் நடந்த முக்கியமான சம்பவங்களை கதை போலச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். உங்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய அருமையான புத்தகம்.

**தமிழ் நிலையம்**
புதுக்கோட்டை.



மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை.